செலவினம் 6 இலட்சம் ரூபாயும், தொடர் செலவினம் 4½ இலட்சம் ரூபாயும் ஆகிறது என்று. எனவே, நிதி ஆதாரம் பெருகுமே யானால், மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோல ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு தீயணைப்பு நிலையத்தை அமைக்க முடியும்.

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள அனைத்துத் தீயணைப்பு நிலையங்களில் எத்தனை தீயணைப்பு நிலையங்கள் வாடகைக் கட்டிடத்தில் இருக்கின்றன? எத்தனை சொந்தமான கட்டிடத்தில் இயங்குகின்றன? அதேமாதிரி தமிழகத்திலுள்ள தீயணைப்பு அதிகாரிகளுக்குக் குடியிருப்பு இல்லங்கள் எத்தனை இடங்களில் இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தனி வினா எழுப்பினால் விவரமான பதில் அளிக்க இயலும்.

தனியாகக் காவல் நிலையம் அமைத்தல்.

* 3358 திரு. யூ. கே. வெள்ளிங்கிரி :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) கோவை மாவட்டம், பி. 3 போலீஸ் ஸ்டேஷன் பகுதியில் உள்ள கணபதி மில்லில் தனியாக போலீஸ் ஸ்டேஷன் அமைக்க அரசு உத்தரவிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு எத்தனை காவல் நிலையங்கள் புதிதாக ஏற்படுத்தப்பட்டன? அறிவிக்கப்பட்டவை எத்தனை என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டவாறு 11 இடங்களில் காவல் நிலையங்களும், 2 இடங்களில் புறக்காவல் நிலையங்களும், 3 இடங்களில் புறக்காவல் நிலையங்கள் முழுக்காவல் நிலையங்களாக மாற்றியும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் புதிதாகக் காவல் நிலையங்களை ஏற்படுத்தக்கூடிய பட்டியலில் வேலம்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட அனுப்பர்பாளையத்தில் புதிய காவல் நிலையம் அமைக்கக்கூடிய புதிய திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதாஎன்று அறிய விரும்புகிறேன்.

1990 ஏப்ரல் 3]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இப்போது அரசிடம் அந்தத் திட்டம் இல்லை. அது குறித்துக் கருத்து அனுப்பினால் கவனிக்கப்படும்.

திரு. மு. க. ஸ்டாலின் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை காவல் நிலையங்கள் சொந்தக் கட்டிடத்தில் இயங்கி வருகின்றன? எத்தனை காவல் நிலையங்கள் வாடகைக் கட்டிடத்தில் இயங்குகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

9-15 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, காவல் நிலையங்கள் சொந்தக் கட்டிடத்தில் இயங்குபவை 768, வாடகைக் கட்டிடத்தில் இயங்குபவை மொத்தம் 267. சொந்தக் கட்டிடங்களில் இயங்கும் புறக்காவல் நிலையங்கள் 108. வாடகைக் கட்டிடங்களில் இயங்கும் புறக்காவல் நிலையங்களின் எண்ணிக்கை 76.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப, குற்றங்களும் பெருகி வருகின்ற நிலை இருப்பதால், புதிய காவல் நிலையங்கள் ஏற்படுத்த அரசிடம் திட்டம் இருக்கிறதா? அப்படி அமைப்பதானால் அதற்கான செலவினம் எவ்வளவு என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அவர் குறிப்பிடுகின்ற பகுதியில் காவல் நிலையங்கள் அமைப்பது பற்றிய செயற்குறிப்பு எதுவும் இல்லை. ஆனால் காவல் நிலையங்கள் அமைப்பதற்கு, முதல்தரக் காவல் நிலையமாக இருந்தால் தொடரும் செலவினம் ரூ. 14.79 லட்சம். தொடராச் செலவினம் ரூ. 1.93 லட்சம். இரண்டாம் தரக் காவல் நிலையமாக இருந்தால் தொடரும் செலவினம் ரூ. 11.68 லட்சம். தொடராச் செலவினம் ரூ. 1.93 லட்சம். மூன்றாம் தரக் காவல் நிலையமாக இருந்தால் தொடரும் செலவினம் ரூ. 8.92 லட்சம். தொடராச் செலவு ரூ. 1.93 லட்சம். நான்காம் தரக் காவல் நிலையமாக இருந்தால் தொடரும் செலவினம் 5.36 லட்சம் ரூபாய். தொடராச் செலவு ரூ. 1.93 லட்சம்.

திரு. சி. கோவிந்தராஜன் : தலைவர் அவர்களே, புதிய காவல் நிலையங்கள் எந்த அடிப்படையில் ஏற்படுத்தப்படுகின்றன? ஜனத்தொகை அடிப்படையிலா அல்லது குற்றங்களின் அடிப்படையிலா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, புதிய காவல் நிலையங்களை ஏற்படுத்துவதற்கு, அந்தப் பகுதியிலுள்ள மக்கள் தொகை, விளைகின்ற குற்றங்களின் எண்ணிக்கை, இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, அந்தப் பகுதியிலே சேர்க்கப்பட்டுள்ள ஏற்கெனவே இருக்கின்ற காவல்

நிலையத்திலிருந்து புதிதாக அமைக்கவேண்டுமென்று கருதப் படுகிற காவல் நிலையத்திற்கு எவ்வளவு தொலைவு என்கின்ற அந்த அடிப்படையிலும், இவைகளன்னியில் சட்டமன்ற உறுப்பினர்களுடைய வேண்டுகோள் அடிப்படையிலும் காவல் நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

திரு. வ. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் தமிழகத்தில் பெண் போலீசுக்கு ஆட்கள் எடுக்கப்பட்டுள்ளதா? ஆமெனில் அதன் விபரம் என்ன என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போலீஸ் ஸ்டேஷனிலிருந்து எங்கோ போய்விட்டீர்கள். (சிரிப்பு)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மகளிர் காவலர்களுக்கு 80 பணியிடங்களுக்கான தேர்வு நடை பெற்றிருக்கின்றது.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகக் கட்டுகின்ற காவல் நிலையங்களுக்கு டெலிபோன் வசதியில்லாமல் இருக்கின்றது. என் தொகுதியிலே கூட பல போலீஸ் ஸ்டேஷன்களுக்கு டெலிபோன் வசதி இல்லாததால், அங்குள்ள எஸ்.ஐ-யுடன் தொடர்புகொள்ள முடியாமல் இருக்கிறது. ஆகவே அத்தகைய காவல் நிலையங்களுக்கு உடனடியாக டெலிபோன் வசதி செய்து கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த அரசு முன்பு பொறுப்பேற்றுக்கொண்டிருந்தபோதே, காவல் நிலையங்களுக்கு அதிகமான தொலைபேசிகளை அப்போதே அமைத்துக் கொடுத்திருக்கிறது. இப்போதும் தொடர்ந்து அத்தகைய ஏற்பாடுகளைச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறது. செய்யும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பெண் காவலர்கள் மொத்தம் எத்தனை பேர் பணியில் உள்ளனர் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பெண் காவலர்கள் மொத்தம் 689 பேர். அதிலே பெண் தலைமைக் காவலர்கள் 80 பேர். பெண் உதவி ஆய்வாளர்கள் 88 பேர்.